நல்லூர் கிளை நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள். ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 29 வியாழக்கிழமை (12-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 106

# தட்டுவன்கொட்டிப் பகுதியில் 7 காவல் அரண்கள் நிர்மூலம்

## 10 படையினருக்கு மேல் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 12

**ஆனையிறவு தட்டுவன்கொட்டிப் பகுதியில் அமைந்திருந்த ஸ்ரீலங்காப் படைகளின் ஏழு காவலரண்கள் விடுதலைப் புலிகளின் மின்னல் வேகத் தாக்குதலினால் நிர்மூலமாக்கப்பட்டன. நேற்று அதிகாலை 3.10 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் போது பத்து இராணுவத்தினருக்கு மேல் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர்.**

பத்து நிமிடங்கள் வரை நீடித்த இந்தத் தாக்குதலில் ஏராளமான நவீன ஆயுதங்களும் இராணுவ தளபாடங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

லெப்டினன்ட் டேவிட், கப்டன் சிறிசங்கர் ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்.

இச்சம்பவத்தை அடுத்து தட்டுவன்கொட்டிப் பகுதியில்

[6ஆம் பக்கம் பார்க்க]

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஆனையிறவு தட்டுவன் கொட்டிக் காவலரண்கள் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், மற்றும் இராணுவ தளபாடங்களின் விவரம் வருமாறு.

★ ஆர். பி. ஜி. — 01
★ ஆர். பி. ஜி. ஷெல் — 05
★ ஆர். பி. ஜி. பிறப்ளர் — 01
★ ரி 56 - 1 — 02
★ ரி 56 - 2 — 03
★ ரி 56 புதிய ரகம் — 01
★ ஜி. 3 ஏ 3 — 02
★ ஏ. கே. கோல்சர் — 02
★ ஜி. 3 ஏ 3 மகசீன் — 04
★ நேற்றோ ரவைகள் — 281
★ ஐ. எம். ரவைகள் — 2738
★ ஜே. ஆர். கைக்குண்டு — 09
★ ரி. 56 மகசீன் — 20

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலி

ஆனையிறவு, தட்டுவன் கொட்டிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல் வேகத் தாக்குதலில் வீரமரணம் அடைந்த லெப்டினன்ட் டேவிட்டின் புகழுடம்பு நேற்று கிளிநொச்சி கந்தசாமி கோவிலடியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. தாக்குதலின் போது படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் லெப். டேவிட்டின் புகழுடம்புக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

## குமாரியிலும் தபால் வரும்

எதிர்வரும் 14ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்து சேர இருக்கும் 'குமாரி' கப்பலிலும் தபால் பொதிகள் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை லில்லி கப்பல் மூலமும் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டது தெரிந்ததே.

## கிளைமோர் தாக்குதலில் ராணுவ வாகனம் சிதறியது

கொழும்பு, மார்ச். 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணத்தீவுக்கும் மஞ்சனுருக்கும் இடையில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய கிளைமோர் வெடித் தாக்குதலில் இராணுவ வாகனம் ஒன்று சிக்கிச் சிதறியது.

இதில் 12 இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர் என்றும் மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## அராலியில் மீண்டும் ஷெல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

அராலிப் பகுதியை நோக்கி படையினர் மீண்டும் ஷெல் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

செவ்வாய் இரவு தீவுப்பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் அராலியில் வயல் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி அங்கு இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டதும்—

இதனை ஆட்சேபித்து அராலிப் பகுதி மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்து, குடியிருப்புப் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதை நிறுத்துமாறு யாழ். அரச அதிபர் ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை விடுத்திருந்ததும் தெரிந்தவையே.

ஆனால் தற்போது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. [இ-12]

## பிரிட்டிஷ் தேர்தல் ஏப்ரல் 9 இல்

லண்டன், மார்ச் 12

பிரிட்டிஷ் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என்று பிரதமர் ஜோன் மேஜர் நேற்று அறிவித்தார்.

எலிஸபத் மகாராணியைச் சந்தித்துவிட்டு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் உத்தரவை அவர் வெளியிட்டார்.

அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடக்கும் திகதியை அவர் அறிவித்தார். [இ-எ]

## முச்சந்தி முரளி



இவை கண்டிக்கிறதைப் பார்த்தால் சட்டியைப் பார்த்து கறுப்பு என்று பானை சொல்லுற கதைபோல் இருக்கு......!

# கொழும்புப் பகுதியில் குண்டு வெடிப்பு!

## 2 மைல் தொலைவுக்கு பெரும் சத்தம்!!

கொழும்பு, மார்ச் 12

கொழும்பு நகரின் தெற்கே புற நகரப் பகுதியில் நேற்றுக் காலை சக்திவாய்ந்த இரண்டு குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்தன.

குண்டு வெடிப்புச் சத்தம் இரண்டு மைல் தொலைவுக்கும் அப்பால் கேட்டதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பொலீஸாரும் அதனை ஊர்ஜிதம் செய்தனர்.

பிலியந்தலை, இரத்மலானைப் பகுதி மக்கள் குண்டு வெடிப்பினால் தமது வீடுகள் அதிர்ந்ததாகத் தெரிவித்தார்கள்.

நேற்றைய குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள் என்ற தகவல்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்ட போதிலும், அது எங்கு இடம்பெற்றது என்பதைப் பல மணி நேரம் சென்றும் பொலீஸாரால் தெரிவிக்க முடியவில்லை.

நேற்று இரவு 10 மணிவரை குண்டு வெடிப்பு எங்கே நடைபெற்றது, எப்படிச் சம்பவித்தது என்பன பற்றிய ஊர்ஜிதமான தகவல்கள் எதுவும் கொழும்புக்கு வெளியே தெரியவரவில்லை.

இரத்மலானைக்கும் பிலியந்தலைக்கும் இடையில் உள்ள பெலிப்பான என்ற ஊரில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக ஒரு செய்தி தெரிவித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷில் அகதிகள்; ஸ்ரீலங்கா அரசும் கவலை!

இராணுவ அடக்குமுறை காரணமாக பர்மாவிலிருந்து முஸ்லிம் அகதிகள் பங்களாதேஷில் தஞ்சமடைந்திருப்பது குறித்து ஸ்ரீலங்கா அரசு கவலை தெரிவித்துள்ளது.

அகதிகளுக்கு தேயிலையை வழங்கப்போவதாக ஸ்ரீலங்கா அரசின் சார்பில் வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினா கூறினார்.

சார்க் அமைப்பில் பங்களாதேஷ் இருப்பதால் அகதிகளால் அந்த நாடு கஷ்டமடைவது குறித்து இலங்கை இரட்டிப்புக் கவலை அடைவதாகவும் திரு. திலகரத்தினா தெரிவித்தார். [ஓ-எ]

## மண்டைதீவிலிருந்தும் ஷெல்

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணம், குருநகர் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

அதேசமயம் பூநகரி - கல்முனை இராணுவ முகாமில் இருந்து அரியாலை பூம்புகார் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. [இ-15]

## திட்டமிட்டபடி ஏப்ரலில் பரீட்சை நடத்தக்கோரி நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாவட்டத்தில் ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சையை திட்டமிட்டபடி ஏப்ரல் இரண்டாம் திகதி தொடக்கம் நடத்தக் கோரி பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று நடத்தினர்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற பொதுக் கூட்டத்தை அடுத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

மாணவர்கள் சுலோக அட்டைகள் தாங்கி, கோஷங்களை எழுப்பியவாறு முதலில் செயலகத்துக்குச் சென்றனர்.

அங்கு அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரிடம் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றை அவர்கள் கையளித்தனர்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். கல்வி அலுவலக அதிகாரி அங்குள்ள அமைச்சு அதிகாரிகளுடன் பரீட்சை தொடர்பாக பேச்சு நடத்தி வருகிறார் என்றும்—

இந்த மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்ப தாம் நடவ

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலில் வரும் பொருள்கள் தனியார் மூலமும் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 12
கப்பல் மூலம் கொண்டு வரப்படும் அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருள்களை தனியார் கடைகள் மூலமும் நியாய விலையில் விற்பனை செய்ய செயலகம் ஏற்பாடுகள் செய்துவருகிறது.

வர்த்தகர்களின் கூட்டம் ஒன்றை விரைவில் செயலகத்தில் நடத்தி விற்பனை விலைகளை நிர்ணயிக்க, முயற்கி எடுக்கப்பட்டுள்ளது.

ப. நோ. கூ. சங்கங்களிடம் போதிய நிதிவசதி இல்லாத காரணத்தால் கப்பலில் வரும் பொருள்களைத் தனியாருக்கு விற்று அவர்கள் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதாகக் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## ராவ் குடும்பத்தினருக்கு 38 பாதுகாப்பு கார்கள்!

### அனைத்தும் குண்டு துளைக்காதவை!!!

புதுடில்லி, மார்ச் 12
இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவினதும், அவரது குடும்பத்தவர்களின் பாதுகாப்புக்கும் குண்டு துளைக்காத 38 கார்கள் பயன்படுத்தப்படுகின்றன!!

ராவின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வோர் உறுப்பினருக்கும் இரண்டு கார்கள் வீதம் உள்ளனவாம்.

அவரின் எட்டு பிள்ளைகளில் ஆறு பேர் மட்டும் 16 கார்களைப் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகிறது.

நரசிம்மராவின் மகன் ஹனம்கொண்டா ஆந்திர மாநில சட்டமன்ற உறுப்பினர் என்பதும் அவர் இப்போது அம்மாநில அமைச்சர் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

இவரது பாதுகாப்புக்கும் புதுடில்லியில் இருந்து கார்கள் விமானம் மூலம் எடுத்துச் செல்லப்பட்டனவாம்! (ஒ-க)

## காங்கேசனில் சிங்களவர் பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், மார்ச் 12
காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் சிங்கள களஞ்சியப் பொறுப்பாளர்களே கடமையாற்றுவதாக அறிய வந்தது.

காங்கேசன்துறையில் உணவுக் களஞ்சியம் திருத்தப்பட்டு அங்கு பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

களஞ்சியத்துக்குப் பொறுப்பான அதிகாரியாக பத்மசிறி என்பவர் கடமையாற்றுவதாகவும் —

தீவுப்பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடமையாற்றுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## வவுனியாவில் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 12
வவுனியாவில் நெரச்சிமோட்டையில் விடுதலைப் புலிகள் குறிபார்த்துச் சுட்டதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் நடந்தது. [இ-3]

### யாழ் ஆஸ்பத்திரியில்

## மத்திய தர பதவிகளுக்கு சிற்றூழியர் மனுச்செய்யலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 12
போதனா வைத்தியசாலைகளைச் சேர்ந்த சிற்றூழியர்கள் நடுத்தர–தொழில்நுட்ப–தரங்களில் உள்ள பதவிகளுக்கு உயர்ச்சி பெறுவதற்கு முதற் தடவையாக வசதிசெய்யப்பட்டுள்ளது.

மருந்தாளர், ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர், கதிரியக்கத் தொழில் நுட்பவியலாளர், சுகாதாரப் பரிசோதகர், கண் தொழில்நுட்பவியலாளர், பற்சிகிச்சைத் தொழில்நுட்பவியலாளர் உட்பட பதினான்கு பதவிகளுக்கு வைத்தியசாலைச் சிற்றூழியர்களும் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது

சிற்றூழியர்களாக 3 வருடங்கள் நிரந்தர சேவை புரிந்தவர்கள் உரிய கல்வித் தகைமைகள் இருந்தால் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

போட்டிப்பரீட்சை ஒன்றின் பின்னரே தகுதியானோர் குறிப்பிட்ட பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்கள் ஆங்கிலத்தில் மட்டுமே பிரசித்தப்படுத்தப்பட்டன. அதனால் பல சிற்றூழியர்கள் விவரங்களை அறிவதற்கு ஆங்கிலம் தெரிந்தவர்களின் உதவியை நாட வேண்டியதாயிற்று. [அ-15]

## காடு வெட்டிய 209 பேர் கைது

கொழும்பு, மார்ச் 13
மன்னம்பிட்டி பாலம் அருகே மகாவலிகங்கையின் இரு ஓரங்களிலும் — சுமார் நூறு ஏக்கர் காடுகளை — வெட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது 209 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களில் பெரும்பாலோர் ஏறாவூர் வாசிகள் என்றும் —

பொலன்னறுவையில் உள்ள அகதி முகாம்களில் அவர்கள் தங்கியுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைதானவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் என்று கருதப்படுகிறது. [ஒ-எ]

### யுத்த முனைக்கு வரவிருக்கும்

## இரு கடற்படை படகுகள் நேற்று வெள்ளோட்டம்

கொழும்பு, மார்ச் 12
யுத்த முனையில் பயன்படுத்தப்பட இருக்கும் இரு புதிய கடற்படைப் படகுகளை நேற்று பிரதம மந்திரி டி.பி. விஜேதுங்க, காலியில் வெள்ளோட்டத்துக்கு விட்டு அவதானித்தார்.

புதிய படகுகளில் 'ரணகஜா' தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் —

'தக்ஷிணா' என்ற மற்றைய படகு பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பழுது பார்ப்பது, பராமரிப்பு வேலைகளுக்கும் உபயோகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது

வெள்ளோட்ட வைபவத்தில் தோட்டத் தொழில் அமைச்சர் ரூபாகருணதிலக்க, தென்மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளென்சி பெர்னாண்டோ ஆகியோரும் வந்து கொண்டனர்.

## இறை நம்பிக்கையை வலுப்பெற உதவிய நாதஸ்வரக் கலைஞர்கள்

### பாராட்டு விழாவில் பண்டிதை புகழாரம்

மானிப்பாய், மார்ச் 12
முதுபெரும் நாதஸ்வர கலைஞர்களான திருவாளர்கள் இராசாவும், ஆறுமுகம் பிள்ளையும் தெய்வீகக் கலையான நாதஸ்வரத்தின் மூலம் மக்கள் மத்தியில் இறை நம்பிக்கையை வலுப்பெற உதவினர்.

இவ்வாறு சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, நாதஸ்வர கலைஞர்களுக்கு இணுவிலில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டார்.

நாதஸ்வர கலைஞர்களான மாவிட்டபுரம் எஸ். கே. இராசா, யாழ்ப்பாணம் பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை ஆகியோருக்கு கடந்த சனிக்கிழமை, இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் கல்யாண மண்டபத்தில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் பலரும் உரையாற்றினார்கள்.

திரு. பொன் சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த பாராட்டு விழாவில் சிவத் தமிழ்ச் செல்வி மேலும் கூறியதாவது:-

இன்று நம் மத்தியில் ஒரு விழிப்பு — எழுச்சி தோன்றியுள்ளது. எல்லோர் உள்ளத்திலும் நன்றி பாராட்டும் உணர்வு, பெரியோர்களை கௌரவிக்கும் பண்பு ஆகியன மேலோங்கி உள்ளன. தெய்வீக கலையை வளர்த்த கலைஞர்கள் பிற்காலத்தில் பொருளாதாரக் கஷ்டமின்றி வாழ தேவஸ்தானங்கள் உதவ வேண்டும் என்றார்.

பாராட்டுக் குழுவினர் சார்பாக இரு கலைஞர்களுக்கும் பொற்கிழி வழங்கப்பட்டது. இசைக் கலைஞர்கள், வேதியர்கள் உட்பட பலர் கலைஞர்களுக்கு மாலையிட்டுக் கௌரவித்தனர்.

நவாலியூர் நா. சச்சிதானந்தன், கலாசூரி என். கே. பத்மநாதன், கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் உட்பட மற்றும் பலரும் முதுபெரும் கலைஞர்கள் இருவரையும் பாராட்டிப் பேசினர். [ஒ-90]


பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம், பளை

லொறி வாடகைக்கான கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்திற்குத் தற்காலிகமாக லொறி வாடகைக்கு கூறுவிலைகள் கோரப்படுகின்றன. பின்வரும் சேவைகளுக்கான கூறுவிலையை 19-3-92 வியாழக்கிழமை 12-00 மணிக்கு நேரடியாக சங்கத்தில் ஒப்படைத்து அன்று விண்ணப்பங்கள் திறக்கப்படும் போது சமுகமளிக்கவும்.

1. யாழ்ப்பாணம், குருநகர், கோண்டாவில் ஆகிய இடங்களுக்கு வெற்று லொறியாகச் சென்று பொருட்கள் ஏற்றி வர.
[25 மைலாகக் கணிக்கப்படும்.]
2. மேற்படி இடங்களுக்கு லோட்டுடன் சென்று பொருட்கள ஏற்றி வர.
3. கொம்படியில் இருந்து — பளை
4. பருத்தித்துறை — பளை
5. முரசுமோட்டை — கொழும்பு வெற்று லொறி
6. முரசுமோட்டை — கொழும்பு லோட்டுடன்
7. முரசுமோட்டை — அநுராதபுரம்
8. சங்கத்தின் கிளைகளுக்கு பொருட்கள் ஏற்ற மைல் ஒன்றுக்கான கூறுவிலை.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. ச.,
பளை.

12-3-1992 [சி/1702]



வீட்டுக் கிரியை அழைப்பிதழும் நன்றி நவிலலும்



வத்சலா பஞ்சலிங்கம்

அன்புடையீர்,

12-2-1992 அன்று சிவபதம் அடைந்த எமது அன்பு மகள் வத்சலாவின் வீட்டுக் கிரியை 13-3-1992 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிக்கு தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து, எங்கள் அன்புச் செல்வியின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

மரண வீட்டில் எங்கள் துக்கத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும், 11-3-1992 இல் வில்லூண்டியில் நடைபெற்ற அந்தியேட்டியில் கலந்து கொண்டோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திரு. திருமதி பஞ்சலிங்கம்
[பெற்றோர்]

42, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(20049)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்புச் சபை பரிந்துரைகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்க வேண்டும்

## கனடா மனித உரிமைக் குழு அறிக்கை

கொழும்பு, மார்ச் 12

சர்வதேச மன்னிப்புச் சபை செய்த 32 பரிந்துரைகளையும் ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொண்டு அமுல் நடத்த வேண்டும்.

ஸ்ரீலங்காவுக்கு அண்மையில் விஜயம் செய்து விட்டு தாயகம் திரும்பிய கனடா மனித உரிமைக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் முன் கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அமுலில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், மற்றும் சில அவசர காலச் சட்ட விதிகளை கொழும்பு அரசு உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

நாட்டில் அமுல் செய்யப்படும் அனைத்துச் சட்டங்களும் சர்வதேசச் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா அரசை கனடா மனித உரிமைக் குழு கேட்டுள்ளது.

மன்னிப்புச் சபையின் பரிந்துரைகளை கொழும்பு அரசு அமுல் செய்வது பற்றி சுதந்திரமாகக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கனடா மனித உரிமைக் குழு வலியுறுத்தியுள்ளது.

[ஒ-எ]

## ஜி.சீ.ஈ. (சா/த) பெறுபேறுகள் மாத இறுதியில் வெளியாகும்

### பரீட்சை ஆணையாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 12

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தர பரீட்சை முடிவுகள் இம்மாத முடிவில் வெளியாகும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இத் தகவலைத் தெரிவித்தார்.

விடைத்தாள் திருத்தும் வேலைகள் முடிவடைந்த போதிலும், அலுவலக வேலைகள் காரணமாக முடிவுகள் வெளியாக இன்னும் இரண்டு வாரங்களுக்கு மேலாகலாம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வடபகுதியில் நடைபெறாதிருந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை எதிர் வரும் ஏப்ரல் மாதம் பாடசாலை விடுமுறையின்போது நடத்த சகல ஏற்பாடுகளையும் செய்து வருவதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

[ஒ-த]

## தங்கம் விலை வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச்12

இலங்கையிலும் தங்கத்தின் விலை குறையத் தொடங்கியிருக்கிறது.

இந்தியாவில் தங்கத்தின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளதன் எதிரொலியாகவே கொழும்பிலும் தங்க விலை வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் 4 ஆயிரத்து 800 ரூபாவாக இருந்த ஒரு பவுண் தங்கம், இப்போது 4 ஆயிரத்து 425 ரூபாவாகக் குறைந்துள்ளது இவ் விலையில் இன்னும் வீழ்ச்சி ஏற்படலாம் என்று தங்க வர்த்தக வட்டாரங்கள் எதிர்பார்ப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

[உ-எ]

## இல்ல மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 12

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு விஜயசுதன் விளையாட்டரங்கில் நடைபெறும்.

★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 12

பூம்புகார் பவானி (நித்திலா) கல்விக்கூட இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

(த)

## சடலம் அடக்கம்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு முன்பாக கடந்த புதனன்று வீதி விபத்திற்குள்ளாகி இறந்ததாகக் கூறப்படும் இளைஞரின் சடலம், நேற்று முன்தினம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் கடந்த ஒரு வார காலமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. [ஒ-15]

## "உதயன்" ஆதரவில் கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். நகர மத்தி ('மிற் றவுண்') றோட்டரிக் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த ஞாயிறன்று யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் ஆரம்பமாகின.

இந்தச் சுற்றுப் போட்டியில் எட்டுக் கழகங்கள் பங்கு பற்றுகின்றன. முதற் சுற்று ஆட்டங்கள் இரு பிரிவுகளில் 'லீக்' அடிப்படையில் நடைபெறுகின்றன.

★ ஞாயிறன்று முதலாவது ஆட்டத்தில் யாழ். சென்றலைட்ஸ் கழக அணி, யாழ். பற்றீஷியன்ஸ் கழக அணியை 30—21 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

**திங்கள் நடந்த போட்டிகள்**

கடந்த திங்களன்று மூன்று போட்டிகள் நடைபெற்றன.

★ சென்றலைட்ஸ் கழக அணி சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை 26—22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

★ பல்கலைக்கழக இணைந்த அணி, யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 44—14 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

★ யாழ். பல்கலைக் கழக 'பி' அணியை, ஷப்றா கழக அணி 40—08 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது.

**செவ்வாய் ஆட்டம்**

★ கடந்த செவ்வாய் காலை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக 'ஏ' அணியினர், சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை 44—16 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தனர்.

மாலை நடைபெற்ற இரு ஆட்டங்களில் ஒன்றில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி, பல்கலைக்கழக 'பி' அணியை 2புள்ளிகளால் வென்றது. ஆட்டம் முடிவடையும் வேளையில் இரு தரப்பினரும் சமமான புள்ளிகளைப் பெற்றிருந்ததால் ஆட்டம் மேலும் ஐந்து நிமிட நேரம் நீடிக்கப்பட்டது அவ்வேளை யாழ்ப்பாணக் கல்லூரி அணி இரு புள்ளிகளைப் பெற்று ஆட்டத்தில் வென்றது.

★ விறுவிறுப்பாக நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில் பல்கலைக்கழக கலப்பு அணியை ஷப்றா கழக அணி 30—26 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது

(உ-20)

## இரவு வேளையில் ஷெல் தாக்குதல்

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு முகாம்களில் இருந்து கண்டபடி இரவில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. [ஒ-144]

## அன்பளிப்பு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் தொழில் நுட்பக் கல்விக்கென ஜெனரேற்றர் மற்றும் தையல் இயந்திரம் ஆகியவற்றை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வழங்கியுள்ளது. [ஒ-117]

## திருமலை பிறிமா ஆலையில் 60 சத வீதமான ஊழியர் சுவாச நோயால் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 12

திருகோணமலை பிறிமா ஆலையைச் சேர்ந்த ஊழியர்களில் 60 சத வீதமானோர், தொய்வு போன்ற சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஊழியர்களுக்கு வழங்கப்படும் முகமூடிகள் தரம் குறைந்தவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமராச்சி பிறிமா ஆலைக்கு விஜயம் செய்தபோது அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் பல்வேறு முறைப்பாடுகளைத் தெரிவித்தனராம். அவற்றில் மேற்கண்டவையும் அடங்கும்.

சிங்கப்பூரிலிருந்து தரமான முகமூடிகளை வரவழைக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஊழியர்களிடம் தெரிவித்தார். [இ]

## சாவகச்சேரி கடையில் திருட்டு

தென்மராட்சி, மார்ச் 12

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள கடை ஒன்று கடந்த ஞாயிறு இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

கடையில் இருந்த பணம் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்களும் திருட்டுப் போயுள்ளதாக காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கடையில் கடந்த மாதமும் திருட்டு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

## வங்கிகள் செயற்பாடு குறித்து விசாரிக்க விசேட ஜனாதிபதி ஆணைக்குழு; அரசாங்கம் நியமிக்க வேண்டும்

### சு.க. பிரேரணை கொண்டு வரும்

கொழும்பு, மார்ச் 12

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்கவேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றை சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் கொண்டு வரவிருக்கிறது.

வங்கிகளின் விவகாரங்களில் அரசியல் தலையீடுகளுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் ஆணைக்குழுவை வங்கியின் இரகசியம் காக்கும் நிபந்தனை கட்டுப்படுத்தக் கூடாது என்றும் நகல் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் வசூலிக்க முடியாத கடன்களாகக் கணிக்கப்பட்ட 600 கோடி ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றவர்கள் யார் என்பதை ஆணைக்குழு வெளிப்படுத்த வேண்டும் என்றும்—

ஆணைக்குழுவின் விசாரணைகள் பகிரங்கமாக நடத்தப்படவேண்டும் என்றும் நகல் பிரேரணையில் சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

கடன்களைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தாது இருப்பவர்கள் யார் என்பதை பகிரங்கமாக வெளியிடுவதுடன் குறைந்தது அவர்களின் குடியுரிமையைப் பறிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் பிரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஒ—எ]

## அமெ. பொம்மர்கள் லண்டனில்! லிபியா மீது தாக்குதல் நடக்குமா?

லண்டன், மார்ச் 12

அமெரிக்காவிடம் உள்ள பி 52 ரக பொம்மர்களில் ஆறு விமானங்கள் நேற்று முன்தினம் லண்டனில் உள்ள அமெரிக்கத் தளம் ஒன்றுக்குச் சென்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த நோக்கங்களுக்காக அவை லண்டனுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று வாஷிங்டனில் பென்ரகன் அதிகாரிகள் கூறினார்கள்.

1988 இல் பிரிட்டன்-லொக்கர் பீ என்னும் இடத்தில் 'பான்அம்' அமெரிக்க பயணிகள் விமானம் ஒன்று லிபியர் இருவரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அமெரிக்காவும், பிரிட்டனும் லிபியாவுடன் இராணுவ ரீதியான அச்சுறுத்தல் ஒன்றை மேற்கொள்ளக் கூடும் என பரவலாகப் பேசப்படும் இத் தருணத்தில் அமெரிக்க பி 52 பொம்மர்கள் லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பது பல வித ஊகங்களை ஏற்படுத்தி இருக்கிறது.

வளைகுடாப் போரில் அமெரிக்காவின் பி 52 ரக பொம்மர்கள் திறம்பட தாக்குதல்களை நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

1988 இல் நடந்த 'பான் அம்' விமானத் தகர்ப்பில் 270 பயணிகள் உயிரிழந்தனர் என்பதும் அத் தகர்ப்பிற்குக் காரணமான இரண்டு லிபியர்களை பிரிட்டனிடமும் அமெரிக்காவிடமும் ஒப்படைக்க லிபியா மறுத்து வருவதும் தெரிந்தவையே.

சில ஆண்டுகளுக்கு முன்னர் லிபியா மீது அமெரிக்காவின் போர் விமானங்கள் மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றை நடத்தியதும் அத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட அமெரிக்கப் போர் விமானங்கள் பிரிட்டனில் உள்ள அமெரிக்கத் தளத்தில் இருந்தே புறப்பட்டுச் சென்றன என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

அத் தாக்குதல் ஜனாதிபதி கடாபியின் வாசஸ்தலத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்டது [ஒ-எ]

## அமெ., பிரிட்டனுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் 26 ஆம் திகதி வழக்கு

கொழும்பு, மார்ச் 12

1988 இல் 'பான் அம்' விமானம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிராக லிபியா சர்வதேச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இம் மாதம் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றது.

லிபியாவின் கோரிக்கைக்கு இணங்க, வழக்கு விசாரணை பகிரங்கமாக நடத்தப்படும் என்று சர்வதேச நீதிமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச நீதிமன்றத்தில் லிபியா தாக்கல் செய்த வழக்கில் கூறப்பட்டிருப்பதாவது; மொன்ட்ரீல் சாசனத்தின்படி லொக்கர் பீ சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லிபியர்கள் லிபியாவின் சட்டத்தின் கீழ்தான் விசாரிக்கப்பட வேண்டும்.

சந்தேக நபர்களை சரணடையச் செய்யக்கூடிய விதத்தில் பயமுறுத்தல் நடவடிக்கைகளிலும் லிபியா நாட்டின் தன்னாதிக்கம், பிரதேச ஒருமைப்பாடு, அரசியல் சுதந்திரம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதத்திலும் நடந்து கொள்ளக் கூடாது என்று பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் — இப்படி லிபியா தனது வழக்கில் கோரியுள்ளது.

(ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய Panasonic Video Camera விற்பனைக்கு உண்டு. Model M8000 [MS1 Model மாதிரி] Complete Set தி. சிவநாதன் [மாஸ்ரர்] மூத்த விநாயகர் கோவிலடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி. [19952]

வயலின் [Violin] விற்பனைக்கு உண்டு. விலாசம்: க. பத்மலிங்கம், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு. [திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அண்மையில்] [20035]

## விற்பனையாகிறது

கிராம சேவையாளர் பதவிக்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகிறது. தினேஸ் புத்தகசாலை, 19, பஸ் நிலைய முன்பாக யாழ்ப்பாணம். [20026]

## மணமக்கள் தேவை

யாழ். கிறிஸ்தவ 30வயது, வங்கியில் உயர் பதவி மணமகனுக்கும், அவரின் சகோதரி 27 வயது பாலர் வகுப்பு ஆசிரியருக்கும் மாற்றுத் திருமணம் விரும்பப்படுகிறது. ABCDE, 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [20036]

யாழ். றோமன் கத்தோலிக்க 28 வயது, வானொலி. தொலைக்காட்சி ரெக்னீசியன். இவரின் சகோதரி 25வயது, மாற்றுத் திருமணத்திற்கு விரும்புகிறார்கள். ABCDE, 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [20037]

## மணப்பெண்கள் தேவை

கத்தோலிக்கரான 35 வயது பிரான்ஸ் மணமகனுக்கும், 40 வயது சுவிஸ் மணமகனுக்கும், 27 வயது டாக்டருக்கும், செவ்வாய்க் குற்றமற்ற 30 வயது கனடா மணமகனுக்கும், சைவபோசன 27 வயது சுவிஸ் மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20038]

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? உங்கள் வினாக்களுக்கு உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு எழுதிப் பலன் கூறப்படும். கைரேகை, விவாகப் பொருத்தம் சொல்லப்படும். தொடர்பு: த. சிவானந்தன், பிரபல ஜோதிடர் ஆனந்தா ஜோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [20025]

## றோணியோ

தரமானது, செலவு குறைவானது. உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கருகாமை, யாழ்ப்பாணம். [சி-1656]

## வெளிவந்து விட்டன

ஏப்ரலில் நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவதற்கான புதிய முறையிலான துரித மீட்டல் பயிற்சிகள், கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. ஆக்கம்; திருமதி ப. இளங்கோ (உடுவில் மகளிர் கல்லூரி) எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி/1586)

## இலவச திருமண சேவை

ஓமான் Quantity Surveyor சதயம் 3, வயது 33, மணமகனுக்கு A/L படித்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். விண்ணப்பதாரர்கள் தொடர்பு: ஞாயிறு காலையில் மட்டும். து. விமலா நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம். [4521]

## வருடாந்த கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது. [த]

## இரு மாதங்களுக்கு முன்னர்
# விசர் நாய்க்கடிக்கு இலக்கானவர் சிகிச்சை பெறாததால் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

இரு மாதங்களுக்கு முன் விசர் நாய்க்கடிக்கு இலக்கான ஒருவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

விசர் நாய் கடித்த பின் அதற்குரிய சிகிச்சையை மேற்கொள்ளாது இருந்த அவர், கடந்த 4 தினங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும்—

அங்கு மேற் கொள்ளப்பட்ட சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் அங்கு மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த பொன்னையா இராசதுரை (வயது 54) என்பவரே மரணமானவராவார். [ஒ-15]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### இன்னாசிப்பிள்ளை அன்ரனிதாஸ்

மண்ணில்: **25—4—1950**

விண்ணில்: **12—3—1991**

''ஆண்டவனடியில் நீ சென்றாலும், அவனையே வேண்டி எம் துயர் மறப்போம்''.

ஓர் ஆண்டு சென்றாலும் மனமோ ஆறவில்லை. விண்ணிலே விரைவாகப் புகுந்து விட்டாய், வேதனையில் வாடுகிறோம். உனை இழந்து தவிக்கும் எங்களுக்கு ஆறுதலாய் இறைவனை வேண்டிடுவோம்.

இவரது பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, மகன், மாமி,
மச்சாள்மார், மச்சான்மார்,
சகோதரிகள், மருமக்கள்.

19/8, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம். [20045]

---

## 150 ஆவது நினைவு நாள்

தவப்புதல்வி
### திருமதி ஜெ. சிவகௌரி அம்மன்

மண்ணில்: **10,762 நாள்**

விண்ணில்: **150 நாள்**

கௌரியின் 150 ஆவது நாள் அஞ்சலி செலுத்தும் போது கணவனின் அம்மம்மா, அத்தை இவர்களின் நினைவு நாட்களையும் நினைவு கூருகின்றோம்.

**60 ஆம் நாள் நினைவாக**
திருமதி தியாகராஜா கமலம்,
திருநெல்வேலி.

**50 ஆம் நாள் நினைவாக**
திருமதி பாலசிங்கம் லெட்சுமி,
புளியங்கூடல்.

இவர்கள் அனைவரதும் நினைவால் நாள்தோறும் வாடிவதங்கும் இதயங்கள்.

- றியோ குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம் (20031)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: **05 - 03 - 1901**

உதிர்வு: **11 - 02 - 1992**

திதி: **12 - 03 - 1992**

### திருமதி அன்னபாக்கியம் வேலுப்பிள்ளை

நொந்து சுமந்து பெற்று, நோகாமல் ஏந்தி,
கனகமுலை தந்து வளர்த்தெடுத்த தாயே!
அந்தி பகலாய் காத்தெம்மை
புகழ் பரப்பச் செய்திருந்தீர்
வந்தித்தோம் வணங்குகின்றோம்
வானுலகில் இறைவனடி சேரவென்று.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

பாக்கிய விலா,
உடுப்பிட்டி.
[20041]

---

## புதுவருட மலிவுவிற்பனை

### 1992 ஆம் ஆண்டுக்கான

★ திருக்கணித மாதக்கலண்டர்
★ திருக்கணித டயரி

என்பன மலிவுவிலையில் விற்பனையாகின்றன.
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

தொடர்பு;
திருக்கணிதம், சாவகச்சேரி. (4524)

---

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,
சுன்னாகம்.

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தால் 14 - 03 - 1992 இல் நடாத்தப்பட இருந்த சாந்தன் இசைக் குழுவினரின்

**"புரட்சி கானங்கள்"**

எனும் நிகழ்ச்சி சுன்னாகம் ஐயனார் கோயில் உற்சவத்தை முன்னிட்டு 22 - 03 - 1992 ஞாயிறு மாலை 5 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- செயலாளர்.

[20046]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்; 17 - 10 - 1930



மறைவு: 12 - 03 - 1991

அமரர்
### சரவணமுத்து மருதலிங்கம்
[J. P., CORONER]

திதி: 29 — 02 — 1992

ஆண்டொன்று சென்ற தெங்கள்
அருட்சோதி தான் மறைந்து
ஈண்டிங் கிடர் என்னும்
கடலில் வீழ்ந் துழல்கின்றோம்
ஆண்டவனின் அடி பணிந்து
அனுதினமும் துதித் திறைஞ்சி
வேண்டுதல்கள் பல செய்தோம்
சாந்தி பெற்றவன் அடிசேர.

அன்புத் தெய்வமே! நின் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள்.

ரூபதநிதி வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. [20034]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## இன்றே செய்க!

கொழும்பில் பௌத்த-இந்து மகாசபை ஒன்று கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. இரு சமயங்களிடையேயும் காணப்படும் தொடர்புகளையும், புரிந்துணர்வையும் வலுப்படுத்தி இரு சமயங்களுக்கும் பொதுவாக உள்ள தன்மை குறித்து இருதரப்பு மக்களும் அறியச் செய்வதே புதிய மகா சபையின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இரு சமயங்களைச் சேர்ந்த மக்களும் கடந்த காலங்களைப் போலவே நட்புறவுடன் வாழ்வதன் அவசியத்தை உணர்த்தவும், அதனை நாடி உழைக்கவும் பௌத்த-இந்து மகாசபை தொண்டாற்றும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

''சிங்களவர்களில் பெரும்பான்மையினர் பௌத்தர்கள். தமிழர்களில் பெரும்பான்மையினர் இந்துக்கள். இந்து சமயமும் பௌத்த சமயமும் அனேகமாகப் பல பொதுவான தத்துவங்களையும் கோட்பாடுகளையும் ஏன் கலாசாரக் கருக்களையும் கொண்டவை. அவற்றை இணை கயிறாகப் பிடித்து பௌத்த மகா சங்கத்தினருடன் இந்து சமய உயர் பீடத்தினர் பேச முயற்சிப்பதால் கேடு எதுவும் இல்லை. பல தப்பான அபிப்பிராயங்களையும், கருத்துகளையும் போக்க உதவலாம்'' — என்று சுமார் மூன்று வாரங்களுக்கு முன்னதாக பெப்ரவரி 21 ஆம் திகதி, இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம்.

அந்தக் கருத்து பௌத்த, இந்து மதப் பிரமுகர்களிடமும் குடிகொண்டிருந்தது என்பதை பௌத்த - இந்து மகாசபையின் தோற்றம் பிரதிபலிக்கிறது. இரு சமய மக்களிடமும் நெருக்கமும், புரிந்துணர்வும் ஏற்படுமானால் மத பீடங்களும் தமக்கிடையே நல்லுறவை உருவாக்க வழி பிறக்கும்.

ஆனால்—

புதிய மகா சபை தயாரித்துள்ள ஏழம்சத் திட்டம் நடைமுறைக்கு வந்து பயன் விளைவிக்க நீண்ட காலம் செல்லலாம் என்றும் —

அதன் காரணமாக தற்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதில் மகாசபை அதிகளவில் பங்காற்றுவது சாத்தியமில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வாறானால் பௌத்த - இந்து மகாசபை வெறும் கண்துடைப்பாகவே முடியும். நாட்டில் இன்று கொதித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட 86 சதவீதமான மக்கள் பௌத்தர்களும் இந்துக்களுமே.

அவர்கள் இருசாராரும் தமக்குப் பொதுவான சமயத் தளத்தைப் பயன்படுத்திப் பிரச்சினையைத் தீர்க்க முயல வேண்டும். குறிப்பாக தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்கும் தாராள மனப்பக்குவம், வாழு வாழவிடு என்ற சகிப்புத் தன்மை, அடக்கி ஆள நினைக்கும் அகந்தையை நீக்குதல் ஆகிய பண்புகள், விழுமியங்கள் பௌத்த மக்களிடையேயும், அவர்களின் மதத் தலைவர்களிடையேயும் முகிழ்க்க வேண்டும். இல்லையேல் மகா சபைகள் வெறும் ஏட்டுச் சுரைக் காய்களாகவே முடியும்.

பிரச்சினை முற்றி இரண்டு தரப்புகளிலும் பேரழிவு ஏற்பட்ட பின்னர், புரிந்துணர்வையும் நல்லுறவையும் உருவாக்க முயல்வது என்பது அர்த்தமற்றதாகும்,

நன்றே செய்க; அதனையும் இன்றே செய்க!

# கெடுபிடி யுத்தம் இல்லா உலகினில்

# ஐ. நா. எதிர்நோக்கும் புதிய சவால்!

**அணு வல்லரசான சோவியத் யூனியன் கடந்த ஆண்டு உலக அரங்கில் இருந்து மறைந்ததுடன், பல தசாப்தங்களாக நீடித்து வந்த கெடுபிடி யுத்தமும் முடிவுக்கு வந்தது.**

**இதனைத் தொடர்ந்து 47 ஆண்டு கால சரித்திரத்தைக் கொண்ட ஐ.நாவின் சமாதானப் பணியை புதிய கோணத்தில் உலக நாடுகள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் காலம் ஆரம்பித்திருக்கின்றது.**

பல தசாப்தங்களாக உலகில் நிலவி வந்த கெடுபிடி யுத்தம் சோவியத் யூனியனின் மறைவுடன் முடிவுக்கு வந்தது.

வல்லரசுகளிடையே யுத்தம் ஒன்று ஏற்படுமா என்ற அச்சம் நீங்கி புதிய சகாப்தம் ஒன்று உலக அரங்கில் 1992 உடன் ஆரம்பமாகியுள்ளது.

இப் புதிய யுகத்திற்கு தலைமை வகித்து உலகை வழி நடத்திச் செல்ல வேண்டிய மாபெரும் பொறுப்பு 47 வயதான ஐ.நா அமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ளது.

### ஐ.நா வின் கடந்த காலம்

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து ஐ.நா அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உலக நாடுகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து செயற்பட்ட காலத்தில் ஐ.நா. சபையின் பணி வேறு கோணத்தில் அமைந்திருந்தது.

இரண்டு வல்லரசுகளும் தங்களுக்கு ஆதரவான நாடுகள் மூலம் ''தரணி யுத்தங்களை'' (Proxy Wars) இப்பரணி முழுவதும் நடத்தி வந்தன. வியட்னாம் யுத்தம், கொரியா யுத்தம் அவற்றில் பிரசித்தமானவையாகும்.

அந்த யுத்தங்களுக்கு முடிவு

**உலக அரசியல்**

காண ஐ.நா. முயன்ற போதெல்லாம் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ரத்து அதிகாரமான வீட்டோவைப் பயன்படுத்தி முறியடித்து வந்தன.

இறுதியில் ஐ நாவையே 'தரணி'யாக வைத்து அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் கடந்த ஆண்டு வளைகுடா யுத்தத்தை நடத்தின.

அணு ஆயுத உற்பத்தியில் போட்டி போட்டுக் கொண்டு இரண்டு வல்லரசுகளும் முன்னேறி வந்தன. இறுதியில் அப்போட்டி விண்வெளி வரை ப்ரவியது; நட்சத்திர யுத்தப் போட்டியாகவும் அது மாறியது.

அக் கட்டத்தில் தான் அக் கெடுபிடி யுத்தத்திற்கு முடிவு கட்டும் நட்சத்திரமாக சோவியத் வானில் கோர்ப்பச்சேவ் தோன்றினார். அதன் பின்னர் கம்யூனிஸ உலகில் ஏற்பட்டு வந்த திடீர் மாற்றங்கள் கம்யூனிஸத்தையே வீழ்ச்சி அடையச் செய்தது.

இறுதியில் கெடுபிடி யுத்தம் பழங்கதையாக சரித்திரப் புத்தகங்களில் இடம் பெறலாயிற்று.

### 47 ஆண்டுகளின் பின்னர் ஐ.நா.

1992 தொடக்கம் ஐ.நா. புதிய பார்வை, புதிய சிந்தனையைப் பெற்றுள்ளது.

வல்லரசு யுத்த அபாயம் போய், இப்போது உலக நாடுகளில் இன, மத ரீதியான யுத்தங்கள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன,

சோவியத் யூனியன் மறைய, அங்கு இன, மத ரீதியாக புதிதாக பதினொரு நாடுகள் தோன்றியுள்ளன. யூகோஸ்லேவியா சமஷ்டி அமைப்பும் இன, மத ரீதியாக சிதற ஆரம்பித்திருக்கிறது.

வல்லரசு நிலையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஐ. நாவின் மத்தியஸ்தப் பணி, இப்போது உலகில் சிறிய, பெரிய நாடுகள் என்ற பேதமின்றி விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

யூகோஸ்லேவியாவில் இன ரீதியாக மாநிலங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் உள்நாட்டுக் கலவரத்தை அடக்க ஐ. நா. அமைதிகாக்கும் படை ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது.

## நாடுகளின் எதிர்பார்ப்பு நிறைவேறும் வாய்ப்புண்டா?

எல்சல்வடோர் நாட்டில் அரசுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே இடம் பெற்றுவந்த 12 ஆண்டுகால சிவில் யுத்தத்தை ஐ நா. முடிவுக்குக் கொண்டுவந்தது. அது மட்டுமல்ல, அங்கு அமுலில் உள்ள யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க ஆயிரத்துக்கும் அதிகமான அமைதி காக்கும் படையினரையும் ஐ. நா. அனுப்பி வைத்திருக்கிறது.

### மொரொக்கோ

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளது மேற்கு சஹாரா பிரதேசம். மொரொக்கோ நாட்டின் ஒரு பகுதியான மேற்கு சஹாரா மக்கள் தனி நாடு கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். பொலிஸாரியோ அமைப்பு விடுதலைப் போராட்டத்தை நடத்திவருகின்றது. இதற்குத் தீர்வுகாணு முகமாக அங்கு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த ஐ. நா. நடவடிக்கை எடுத்து வருகின்றது

மேற்கு சஹாரா மக்கள் தாம் சுதந்திர நாட்டினராக வாழ விரும்புகின்றார்களா அல்லது மொரொக்கோவின் ஒருபகுதியாக இருக்க விரும்புகின்றார்களா என்பதை அறியவே இந்த சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படவிருக்கின்றது.

### கம்போடியா

பல ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தத்தினால் சீரழிந்துள்ள கம்போடியாவில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஐ. நா. வெற்றிகரமாகக் கொண்டு வந்துள்ளது. இதன் கீழ் கம்போடிய மக்கள் தமக்கென ஓர் அரசை 1993 இல் பொதுத் தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யவிருக்கின்றனர். அதுவரை கம்போடிய நாட்டை ஐ. நாவே நிர்வகிக்க உள்ளது. அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐ. நா. முன்னோடிக் குழுவை நொம்பென்னுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அஸர்பைஜான் - ஆர்மேனியா மோதல் மற்றும் சோமாலியா உள்நாட்டுக் கிளர்ச்சி ஆகியவற்றைத் தீர்க்கவும் ஐ. நாவின் மத்தியஸ்தம் நாடப்பட்டுள்ளது.

நாடுகளிடையே இடம் பெறும் போதைவஸ்துக் கடத்தல், சனத்தொகை அதிகரிப்பு, மூன்றாம் உலகநாடுகளில் — சிறப்பாக ஆபிரிக்க நாடுகளில் நிலவும் பஞ்சம், பட்டினி, மற்றும் நீர் நிலைகள், சமுத்திரங்கள் மாசடைதல், பூமி வெப்பமடைதல் மற்றும் சூரியனின் ஊதா ஒளிக்கதிரில் இருந்து பூமியில் உள்ள ஜீவராசிகளைப் பாதுகாக்கும் ஓஸோன் படலம் அழிந்து போதல் ஆகிய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து தீர்வுகாணும் பாரிய பொறுப்பையும் ஐ. நா. நிறைவேற்ற வேண்டியுள்ளது

### ஐ. நா. நிர்வாக அமைப்பில்...

கடந்த வாரத்துடன் ஐ.நா. சபை அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 175 ஆக அதிகரித்துள்ளது.

ஐ. நாவின் முக்கிய அங்கமாக 15 உறுப்பினர் கொண்ட ஐ. நாவின் பாதுகாப்புச் சபை அமைந்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், சோவியத்யூனியன் ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. சோவியத் யூனியனின் இடத்தைத் தற்போது ரஷ்யா வகிக்கின்றது. இந்த ஐந்து நாடுகளும் ரத்து [வீட்டோ] அதிகாரத்தைப் பெற்றுள்ளன. ஏனைய பத்து

— தீபன்ராஜா —

உறுப்பு நாடுகளும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டு ஜேர்மனிகளும் இணைந்த பின்னர், ஐக்கிய ஜேர்மனிக்கும் ஜப்பானுக்கும் பாதுகாப்புச் சபையில் இடமளிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளும் பாதுகாப்புச்சபையில் தமக்கும் இடமளிக்க வேண்டும் என்றும் வற்புறுத்த ஆரம்பித்துள்ளன. இந்தியா, பிரேஸில் மற்றும் நைஜீரியா ஆகியவற்றுக்கு பாதுகாப்புச் சபையில் இடமளிக்கப்பட வேண்டும் என்று மூன்றாம் உலக நாடுகள் தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர உறுப்பு நாடுகளிடமிருந்து வீட்டோ அதிகாரம் பறிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்திருக்கின்றது.

### நிதி விவகாரத்தில் வங்குரோத்து

ஐ.நாவின் புதிய பொதுச் செயலாளராக எகிப்தைச் சேர்ந்த ஜனாப் பூட்ரஸ் பூட்ரஸ் காலி 1-1-1992 முதல் பதவியேற்றுள்ளார்.

நிதி விஷயத்தில் ஐ. நா. ஸ்தாபனம் வங்குரோத்து நிலையை எட்டிப் பார்ப்பதாக எச்சரிக்கப்படுகிறது. அங்கு அளவுக்கதிகமான ஊழியர்கள் பணிபுரிகின்றனர். நிர்வாகத் திறமையீனம் இன்னொரு பக்கம் நிலவுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஐ.நாவிற்கு செலுத்த வேண்டிய சந்தாப் பணத்தை செலுத்துவதில் பல நாடுகள் பின்னடித்து வருகின்றன.

இந்த நிலையில் ஐ. நா. அமைப்பு புதிய பாதையில் சமாதானப் பணியை மேற்கொள்ள வேண்டிய சவாலை எதிர்நோக்கியுள்ளது.

என்றுமில்லாத வகையில் ஐ. நாவின் அமைதிப் பணியை உலகில் பல நாடுகள் எதிர்பார்க்கும் காலம் ஆரம்பமாகியுள்ளது.

20 துணைச் செயலாளர்கள், 27 உதவிச் செயலாளர்களுடன் பணிபுரியும் 67 வயதான பொதுச்செயலாளர் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலி, சவாலைச் சமாளித்து உலக நாடுகளின் புதிய எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வாரா? ★

## சந்திரசேகரன் தொடர்ந்து காவலில்:

# 16 தொழிற் சங்கங்கள் கூட்டாக எதிர்ப்பு

மலையகத் தொழிலாளர் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரனைத் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்கு தோட்டத்துறையைச் சேர்ந்த 16 தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

திரு. சந்திரசேகரனை விடுதலை செய்யவேண்டும். அல்லது நீதிமன்றத்தில் அவர் மீது குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று பதினாறு தொழிற் சங்கங்களும் கூட்டாக விடுத்த அறிக்கையில் கோரியுள்ளன.

டாக்டர் சுனில் இரத்தினப்பிரியா அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கின்றார்.

[ஒ-எ]

# தெலுங்கு தேசம் கட்சி பிளவுபடும் ஆபத்து

புதுடில்லி, மார்ச் 12

ஆந்திர மாநில முன்னாள் முதலமைச்சர் என். ரி ராமராவின் தலைமையிலான தெலுங்கு தேசம் கட்சி பிளவுபடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி உரை மீதான வாக்கெடுப்பில் தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த 13 எம். பிக்களில் ஒன்பது பேர் கலந்து கொள்ளாததைத் தொடர்ந்து அக்கட்சிக்குள் நெருக்கடி நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தெலுங்கு தேசம் கட்சி எம். பிக்கள் நான்கு பேரே வாக்கெடுப்பின் போது எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து வாக்களித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — ஜனாதிபதி உரை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத ஜனதாதள் எம் பிக்கள் சிலர் மீது அக்கட்சியின் தலைமைப்பீடம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தால் அக்கட்சி மேலும் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும் என்றும் புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

9 எம். பிக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதது பற்றி கருத்துத் தெரிவிக்க தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் என். ரி. ராமராவ் மறுத்து விட்டார்.

நிலைமையை ஆராய்வதற்குக் கட்சியின் செயற்குழு எதிர்வரும் சனிக்கிழமை கூடும் என்றும் திரு. ராமராவ் கூறினார்.

[ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு அரக்கோணத்தில் 'ராஜாளி' தளம் நேற்று திறப்பு

## தென்கிழக்கு ஆசியாவிலேயே இது மிகப் பெரியது

சென்னை, மார்ச் 12

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய ஓடு பாதையைக் கொண்டதும் இந்தியாவிலேயே மிகப்பெரியதுமான அரக்கோணம் கடற்படை விமானத்தளத்தை தமிழ்நாடு-அரக்கோணம் அருகே இந்திய ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமன் நேற்றுத் திறந்துவைத்தார்.

இந்த கடற்படை-விமானத் தளத்திற்கு 'ஐ. என். எஸ். ராஜாளி' என்று பெயரிடப் பட்டுள்ளது. சுமார் நூறு கோடி ரூபா செலவில் இத் தளம் அமைக்கப்பட்டிருக்கிறது.

''இந்து மாகடல் பகுதியில் இந்தியா முக்கிய நாடாக உள்ளது. தற்போதுள்ள சர்வதேச சூழ் நிலையைக் கருதி நாம் வலுவுள்ள கடற்படையை வைத்திருப்பது அவசியம்''—என்று ஜனாதிபதி வெங்கட்ராமன் அங்கு நடந்த கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ராஜாளி கடற்படை-விமானத்தளம் மூலம் நமது கடற் பிரதேசங்களை எதிரிகளிடமிருந்து கடற்படை பாதுகாக்கும் திறன் அதிகரித்துள்ளது என்றும்—

அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவுகளைக் கொண்டிருக்கவே இந்தியா விரும்புகின்றது என்றாலும், நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வரும் அச்சுறுத்தலைச் சமளிக்க எப்போதும் இந்தியா தயார் நிலையில் உள்ளது என்றும் திரு. வெங்கட்ராமன் சொன்னார்.

இலங்கைப் பிரச்சினைகளால் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு இந்தியக் கடற்படையின் சில பிரிவுகள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்று மாநில ஆளுநர் பீஷ்மநாராயணசிங் சொன்னார்.

அரக்கோணம் ராஜாளி கடற்படை - விமானத்தளம் ரியு 142 ரக விமானங்கள் தரையிறங்கக் கூடியதாக ஓடு பாதை அமைக்கப்பட்டு உள்ளது. அரக்கோணத்தில் இருந்து ஆறு நிமிடங்களில் சென்னைக் கடலோரப்பகுதிக்குச் செல்லும் வல்லமை பெற்ற இந்தரக விமானங்கள் எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்களை அழிக்கும் ஆற்றல் பெற்றவை என்றும் மேலும் இந்த விமானங்கள் சம்பந்தப்பட்ட கப்பல்களுக்கு மேல் ஆகாயத்தில் பன்னிரண்டு மணி நேரம் வரை வட்டமிடும் சக்தி பெற்றவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஓ-எ)

## பாகிஸ்தான் அணியிடம் ஆஸி. அணி தோற்றது!

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலிய அணியை 48 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 220 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலளித்து ஆடிய ஆஸ்திரேலிய அணி 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 172 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆட்டமிழக்காது 76 ஓட்டங்கள் பெற்ற பாகிஸ்தான் வீரர் அமீர் சொஹயில் சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார். (உ-10)

## நாடுகள் பெற்ற புள்ளிகள்

மெல்போர்ன், மார்ச் 12

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கு கொள்ளும் ஒன்பது நாட்டு அணிகளும் இதுவரை பங்குபற்றிய ஆட்டங்கள் மற்றும் வெற்றி, தோல்வி, அதன் மூலம் பெற்ற புள்ளிகள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:-

| நாடுகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | சமம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 5 | 5 | — | — | 10 |
| இங்கிலாந்து | 5 | 4 | — | 1 | 9 |
| தென்னாபிரிக்கா | 6 | 4 | 2 | — | 8 |
| ஸ்ரீலங்கா | 6 | 2 | 3 | 1 | 5 |
| இந்தியா | 6 | 2 | 3 | 1 | 5 |
| மேற்கிந்தியா | 6 | 3 | 3 | — | 6 |
| ஆஸ்திரேலியா | 6 | 2 | 4 | — | 4 |
| பாகிஸ்தான் | 6 | 2 | 3 | 1 | 5 |
| ஸிம்பாப்வே | 6 | — | 6 | — | — |

### பஞ்சாப்பில்

## 7 பொறியியலாளர் உட்பட 15 பேர் சுட்டுக்கொலை

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் ஒன்றில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

துணி ஆலை ஒன்றுக்குள் நுழைந்த சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப்பியர்களைப் பிரித்து தனியாக நிற்க வைத்து விட்டு ஏனையோரைச் சுட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களில் ஏழு பேர் பொறியியலாளர்கள். மிகுதி எட்டுப்பேரும் முகாமையாளர் தரத்தில் உள்ளவர்.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் யூகோஸ்லாவிய நாட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [இ-10]

## கைப்பற்றப்பட்ட..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

- ★ ஜி 3 மகசீன் — 02
- ★ மேகால்சர் — 01
- ★ ஹெல்மட் — 02
- ★ தண்ணீர்க்கான் — 01
- ★ தொலைத் தொடர்பு சாதனம் — 01
- ★ சப்பாத்து — 3 சோடி

(இ-5-165-117-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

மேசையில் இருந்த குப்பி விளக்கு படுக்கையில் இருந்த சிறுவன் மேல் விழுந்ததால் சிறுவன் உடல் முழுவதும் தீக்காயங்களுக்குள்ளானான்.

சுன்னாகத்தில் நேற்றிரவு 10 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் இரத்தினம் உதயகுமார் [வயது 14] என்ற சிறுவனே காயமடைந்தவன் ஆவான். [இ-15]

## கொழும்பு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரத்மலானை விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த—சீனாவிடம் வாங்கப்பட்ட— போர் விமானங்களில் ஒன்று கோளாறு காரணமாக வெடித்ததினால் இச்சத்தம் கேட்டதாக இன்னொரு தகவல் தெரிவித்தது.

இரத்மலானையில் போர் விமானம் ஒன்றில் தயாராக வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு தவறுதலாக வெடித்ததினால் இச்சம்பவம் நிகழ்ந்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

ஆனால் பொலீஸாரோ அல்லது பாதுகாப்பு அமைச்சுத் தரப்பினரோ இவற்றில் எதனையும் ஊர்ஜிதம் செய்யவில்லை.

குறிப்பிட்ட சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை என்று ரூபவாஹினி தெரிவித்ததே அன்றி சம்பவம் எங்கு நடந்தது என்பதைத் தெரிவிக்கவில்லை.

எனினும்—குண்டு வெடித்த இடத்தை கண்டுபிடிப்பதற்காக இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அப்பகுதியில் தாழ்வாகப்பறந்து சென்றதை பொதுமக்கள் பார்த்தனர் என்றும்—

ஏரி அருகே உள்ள நகரில் குண்டுகள் தயாரித்துக்கொண்டிருந்த போது அவை வெடித்திருக்கலாம் என்றும் — உறுதிப்படுத்தப்படாத ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

[அ-எ]

## தட்டுவன்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூன்று குண்டுவீச்சு விமானங்களும் இரு ஹெலிக்கொப்டர்களும் தாக்குதல் நடத்தின.

அதே சமயம் ஆனையிறவுப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் நால்வர் படுகாயம் அடைந்தனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

[இ-5-165-12-15-14-15]

## பரீட்சை நாட்களில் படையினருக்கு விசேட அறிவுறுத்தல் வேண்டும்

### ஜனாதிபதிக்கு மாணவர் மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சை நடைபெறும் நாட்களில், பரீட்சையைப் பாதிக்கக் கூடிய விதத்தில் படையினர் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது. இது தொடர்பாக படையினருக்கு விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் யாழ். மாவட்ட மாணவர்கள் இப்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி முடிவில் ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்டு, அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சை பின்போடப்பட்டால் யாழ். மாவட்ட மாணவர்கள் 92 க்கான தேசிய தேர்வுப் பட்டியலில் தமக்குள்ள இடங்களை இழப்பதுடன் குறித்த வயதில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் வாய்ப்பையும் இழக்க நேரிடும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## நாய்க்கு உணவாகிய அநாதையின் சடலம்!

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 12

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பொது மயானத்தில் மனித சடலம் ஒன்றை நாய்கள் அங்கும் இங்கும் இழுத்துத் திரிந்தபடி, சண்டையிட்டுக் கொண்டிருந்தன! 'கெட்டித்தனமான' நாய்கள் சடலத்தின் அங்கங்களை பிய்த்துக் குதறி தமது வயிற்றை நிரப்பிக் கொண்டன!!

உரிமை கோரப்படாத நிலையில் அடக்கம் செய்யப் சடலம் ஒன்றுக்கே இந்தக் கதி ஏற்பட்டது.

கிளிநொச்சி மருத்துவமனையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் இந்தச் சடலம் ஆழம் குறைந்த குழியில் — கவனயீனமாக புதைக்கப்பட்டிருந்ததாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதையே நாய்கள் கிளறி எடுத்து உணவாக்கிக் கொண்டன என்று சொல்லப்பட்டது. [ஓ-76]

## திட்டமிட்டபடி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிக்கை எடுப்பதாகவும்— அரச அதிபர் தெரிவித்தார்.

இதனை அடுத்து பேரணியினர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்துக்கு சென்று மகஜர் கையளித்தனர்.

அதன் பின்னர் பேரணி பல்கலைக்கழகத்தில் முடிவடைந்தது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

[இ-3]


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் வாமதேவன்

[இளைப்பாறிய கல்வி இலாகா இலிகிதர்]

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான பொன்னம்பலம் வாமதேவன் [இளைப்பாறிய கல்வி இலாகா இலிகிதர்] காலமாகிவிட்டார்.

இவர் புஸ்பவதியின் அன்புக் கணவரும், சியாமளா [லண்டன்], சுரேஸ் [லண்டன்], சுஜாத்தா [ஆசிரியை, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை] ஆகியோரின் அன்புத் தகப்பனும், மோசனகுமாரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை [12-3-1992] காலை 11-00 மணிக்கு நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய்.
(20048)

தகவல்:
க. நாகராசா
[சகலன்]

திருமதி
### சிவக்கொழுந்து வினாசித்தம்பி

அலுக்கை, அளவெட்டியைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து வினாசித்தம்பி 9-2-92 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் க.வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், சத்தியலட்சுமி [அஸ்வினி ஜுவலர்ஸ், சுன்னாகம்], இராஜரட்ணம் [வீனஸ் ரேட், கொழும்பு] சண்முகநாதன் [ஆசிரியர், விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம்], பேரின்பநாயகம் [பிரபா], சரஸ்வதி, மகாலிங்கம் [கனடா], வசந்தலோஜினி [டென்மார்க்] ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [12-3-1992] மாலை 4-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சண்முகநாதன்
[மகன்]
(20050)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org